**யடியந்தொட்டை பிரதேச சபை - 2022**

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யடியந்தொட்டை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத்தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் யடியந்தொட்டை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6 (i)(ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணனி கொள்வனவிற்காக உடன்படிக்கை செய்திருக்காத போதும் ரூபா 900,000 ஆன ஒதுக்கீடு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | 2023 ஆம் ஆண்டில் தீர்ப்பதாக. | கணக்குகள் சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வருமான செலவு கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய ரூபா 1,583,588 தொகையை மீளாய்வாண்டில் பசளை உற்பத்தி பற்றாக்குறை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | கூட்டுத் தொகை ரூபா 55,119,772 ஆன 15 காணி மற்றும் கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளாதுவரையாக்குவதாக. | -மேற்படி- |
| (ஈ) | துண்டுப்படுத்தி விற்பனை பூர்த்தி செய்த காணியொன்றிலிருந்து கிடைத்த ரூபா 784,000 தொகையை வைப்பு கணக்கிலிருந்து அகற்றி வருமானத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. அவ்வாறே, அந் உள்ளவாறான விற்பனைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 100,990 இனை பெற வேண்டிய வருமானமாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | அப் பெறுமதியை எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளவுள்ளதாக. | -மேற்படி- |

## 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 98,600 ஆன டெண்டர் பிணை வைப்பு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 17,784,468 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 11,989,012 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 2 வங்கி கணக்குகளில் நிலவிய ரூபா 13,723,816 ஆன மீதியை குருங்கால முதலீட்டிலேனும் ஈடுபடுத்தி வருமானம் உழைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குருங்கால முதலீட்டில் ஈடுபடுத்த கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக. | மேலதிக் தொகையை முதலீடு செய்து வருமானம் உழைத்துக் கொள்ள வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 4,306,642 | 4,475,968 | 4,262,495 | 1,204,536 | 4,774,648 | 4,472,797 | 4,572,798 | 975,863 |
| வாடகை | 8,479,900 | 7,874,817 | 8,417,067 | 153,951 | 8,800,960 | 5,611,520 | 4,809,011 | 606,638 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 850,050 | 957,409 | 967,000 | - | 725,050 | 931,452 | 118,900 | 9,600 |
| ஏனைய வருமானம் | 5,139,700 | 8,413,354 | 7,458,054 | 1,204,735 | 4,404,500 | 2,176,642 | 2,033,024 | 354,198 |
| | 18,776,292 | 21,721,548 | 21,104,625 | 2,563,222 | 18,705,158 | 13,192,411 | 11,533,733 | 1,946,299 |

### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரைகள** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2003 – 2010 ஆண்டுகளிற்கு இடையிலான காலத்தனுள் பிரித்த 08 காணிகளின் உள்ளவாறான விற்பனையின் மீது கிடைக்க வேண்டிய தொகையை 1987 இலக்கம் 15 கொண்ட பிரதேச சபை சட்டத்தின் (1) பிரிவு பிரகாரம் அறவிட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு வழிகாட்டலை கவனத்திற் கொண்டு தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டம். |
| (ஆ) | வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடை வாடகை ஆகிய வருமான விடயங்களிலிருந்து 2022 திசெம்பர் 31 திகதி ரூபா 1,358,488 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டிற்கும் இடையிலான காலம் பழைய ரூபா 640,898 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விட பழைய ரூபா 22,060 ஆன மீதியும் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 59 மற்றும் 67 ஆம் இலக்கம் பிரகாரம் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் வியாபார வரி மற்றும் அனுமதிபத்திர கட்டணத்திற்காக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாததால் ரூபா 860,326 ஆன சேகரித்த வருமானம் ஆண்டின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டினுள் கணிப்பீடொன்றை மேற்கொள்வதாக. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | விளம்பர அறிவித்தல் பலகை கணிப்பீட்டை மேற்கொண்டு பில்லிடலிற்கு பதிலாக ஆண்டினுள் சேகரித்த ரூபா 97,075 தொகையை ஆண்டின் வருமானமாக கருதப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் மேற்கொண்ட கணிப்பீட்டின் பிரகாரம் பெற வேண்டிய வருமானம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திருத்தமும் காலரீதியாக மேற்கொள்ளப்படுவதால் 2022 ஆண்டில் கிடைத்த வருமானம் அவ்வாண்டின் மதிப்பீடாகக் கருதுவது நியாயமானதாக. | கணிப்பீட்டை மேற்கொண்டு விளம்பரப்பலகை வருமானத்தை சரியாக இனங்காண வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 01 ஆண்டிற்கும் 04 ஆண்டுகளிற்கும் இடையில் பழமையான ரூபா 6,820,484 ஆன மீதி கடன்கொடுனர் மீதியினுள் நிலவியது. | தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நன்கொடையாக 2019 ஆண்டின் கிடைத்த பாதைகள் சுத்தப்படுத்தும் இயந்திரமொன்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த இயந்திரம் சபையின் தேவைபாட்டுடன் இணங்குவதில்லை. இயந்திரத்தின் பாதுகாப்பிற்கு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கியதாக. | சபையின் தேவைப்பாட்டிற்கு பொருந்தாவிடின் உரியவாறு பராதீனம் செய்ய வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிதுல்கல பிரதேசத்தில் 2021 ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட ரூபா 1,950,822 ஆன 14 வியாபார அறைகள் 2022 ஒக்தோபர் வரையும் பயன்பாடின்றி நிலவின. | 11 வியாபார அறைகளை குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும், எஞ்சிய 3 வியாபார அறைகளையும் குத்தகை வழங்கும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. | சொத்துக்கள் பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |
| (ஆ) | யட்டியந்தொட்ட மற்றும் கிதுல்கலயில் 03 மீன் வியாபார கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது தேவையான மதிப்பீடு, உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை | இது தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் முன் நடவடிக்கை மேற்கொள்வதாக. | வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளர் ஊடாக பெற்றுக் கொண்டு இருக்கவில்லை. அவ்வாறே, கிதுல்கல மீன் வியாபாரக் கடை 2015 ஆண்டு முதல 2021 ஆண்டு வரை தொடர்ந்தும் ஒரே மணுதாரருக்கு குத்தகைக்கு வழங்கியிருந்தது. | | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 10 பதவிகளுக்காக சேவை ஒப்பந்தம் மீது ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நியமன அதிகாரி அறிவூட்டப்பட்டுள்ளதாக. | தேவைபாட்டின் மீது வெற்றிடங்களை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபையின் 33 ஊழியர்களிடமிருந்து 1985 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை காலத்திற்குரியதாக ரூபா 169,423 ஆன தொகை அறவிட வேண்டியதாக நிலவியது. | நிலுவை தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாக. | நிலுவை கடனை தாமதமின்றி அறவிட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 02 ஆதனங்கள் 2020-2022 ஆண்டு காலத்தினுள் குத்தகைக்கு வழங்காததனால் அதன் குறைந்தபட்ச கேள்வி பெறுமதியான ரூபா 302,500 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | குத்தகைக்கு வழங்க முடியுமான சொத்தக்களிலிருந்து வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | ரூபா 16,455,000 ஆன 09 வாகனங்களின் மற்றும் ரூபா 3,200,000 ஆன பொப்கெட் இயந்திரத்தின் உரிமையை சுவீகரித்திருக்கவில்லை. | பயன்பாட்டுக்கு ஒவ்வாத 09 வாகனங்களில் 02 இனை பராதீனம் செய்யவும் எஞ்சிய வாகனங்களை சுவீகரித்திக்கொள்ளவும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ள்ளதாக. | சொத்துக்களின் உரிமையை தீர்திக்கொள்ள வெண்டும். |
| (இ) | ரூபா 11,302,500 ஆன 07 வாகனங்கள், பெகோ இயந்திரமொன்று மற்றும் ஒரு நீர் பவுசர் 01 அண்டு முதல் 13 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்று நிலவின. | பராதீனம் செய்ய தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக. | சொத்துக்களை பயன்பாடின்றி வைத்திருக்கக் கூடாது. |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 18 காணிகள் 2017 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க சபரகமுவ மாகாண சபை திறைசேரி சுற்றறிக்கைக்கு இணங்காது குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 69,636,100 ஆன மதிப்பீட்டின் மீது கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | அரசாங்க மதிப்பீட்டை பெற்றுக்கொண்டு 2023 ஆண்டில் இப் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |